★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE:

நம் நாடு

திராவிடக் கின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 9உ வெள்ளி (22—6—56) ★ ★ வேலூர்: ஆனி 10உ சனி (23—6—56) [இதழ் 7

பட்டினிக் கொடுமைக்கு 20 பேர் பலி

பட்டினிச்சாவு என்ற கொடுமை பற்றி மீண்டும் தகவல்கள் கிடைக்கின்றன.

மைசூர் மாநிலத்தில் நஞ்சன்கூடு பிரிவைச்சேர்ந்த பறை குப்பே என்ற கிராமத்தில், இதுவரை சுமார் 20 பேர்கள் பட்டினியால் மாண்டது பற்றித் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக எம். எஸ். குருபாதசாமி என்ற மக்கள் சபை உறுப்பினர் பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்திருக்கிறார்.

மாநில சர்க்கார், உடனடியாக அந்தப் பிரதேசத்தைப் பஞ்சப் பிரதேசம் என்று, பிரகடனம் செய்து, மத்திய சர்க்காரிடமிருந்து தேவையான உதவிகளைப் பெற வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

'நாஸ்தீகர்' என்று பழித்து நம்மை அழிக்க முடியாது!

ஆச்சாரியாருக்கு விநோபா தந்த பதில் என்ன?

தனிப்பட்டோர் எவர்மீதும் நமக்குப் பகை இல்லை

முள்மீது விழுந்த பட்டுத் துணியை எடுக்க ஆத்திரப்படுவது விவேகமானதல்ல

உண்மையான 'ரௌடி'களை காமராசர் அறியாரா?

அண்ணு இலட்சிய பரணி

"பூதானம் கேட்டு தமிழகத்திற்கு வந்துள்ள விநோபா பாவேயைப் பார்த்து, சர்வோதய சம்மேளனத்தில் ஆச்சாரியார், 'தமிழ்நாட்டில் நாஸ்தீகம் பரவிவிட்டது; அதுவும், இந்தக் காஞ்சிபுரத்தில் அரக்கர்கள் ஏராளமாகிவிட்டார்கள்; நீங்கள் தான் அந்த அரக்கர்களை ஒழித்து, நாஸ்தீகத்தை அழித்து, ஆஸ்தீகம் தழைக்க அருள்புரிய வேண்டும்,' எனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்; ஆனால், ஆச்சாரியார் கருத்துக்கு விநோபா எவ்வளவு மதிப்புத் தந்தார் என்பதை அவரது பதில் நன்றாக எடுத்துக் காட்டிற்று—'ஆஸ்தீகம் பேசிக்கொண்டே அண்டை வீட்டுக்காரனைக் கெடுப்பதைவிட, நாஸ்தீகம் பேசி நல்லவராய் வாழ்வது நல்லது,' என்று விநோபா பதில் தந்திருக்கிறார்.

"நம்மை நாஸ்தீகர்கள் என்று பேசியே—பழி சுமத்தியே ஒழித்துவிட நினைப்போருக்கு விநோபாவின் பதிலைத்தான் நாம் சுட்டிக்காட்ட முடியும்.

"நாட்டு மக்களை இப்படி எல்லாம் கூறி ஏமாற்றிவிட முடியாது என்பதையும் அவர்கள் உணர்ந்துகொண்டால் நல்லது.

"பற்றற்று இருக்கும் விநோபாவை நானும் சில நாட்களுக்குமுன் கண்டேன்; அப்போது அவர் என்னிடம் கழகத்தின் சமுதாயக் கோட்பாடு பற்றிக் கேட்டபோது, நான், 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்பதே நம் கொள்கை என்றேன்; அவர், அதுவே தம்முடைய கொள்கையும் என்று உரைத்தார்.

"ஆகவே, ஆஸ்தீகம்—நாஸ்தீகம் என்று பேசி, மக்களை ஏமாற்றி, கழகத்தை அழித்துவிட முடியாது என்பதை, நம்மை அழித்துவிட நினைப்போருக்குக் கூறுகிறேன்,"

என்று அண்ணு அவர்கள், 15-6-56 அன்று, திருவில்லிபுத்தூரில், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"எனக்கு முன்பாக இங்கு பேசியவர்கள்; இன்று ஆட்சிபீடத்திலிருப்போர்களின் ஆகாத போக்குகளைச் சுட்டிக்காட்டி பலத்தக் கண்டனம் எழுப்பினார்கள்.

"இன்று நம்மால் இப்படிக் கண்டிக்கப்படுபவர்கள் எல்லாம், நமது கழகத்தில் இன்றில்லாவிடினும் நாளை, வந்து சேரவேண்டியவர்கள்.

"நம்முடைய வேலை, நாம் எடுத்துக்கொண்டுள்ள பணி, ஓட்டு வேட்டையாடுவதல்ல; நாட்டை மீட்கும் பெரிய காரியமாகும். எனவே, நாட்டை மீட்பதற்காகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாம், நமது மாற்றாரும் நமது அணியில் சேரும்வகையில், நமது கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும்.

"இன்று தமிழினம்—திராவிட மக்கள், தங்கள் மானத்தை இழந்து, உரிமை இழந்து, அரசு இழந்து தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, இழந்தவற்றைத் திரும்பப் பெற்றுத் தருவதற்காக நாம் பாடுபடுகிறோம்—போராடுகிறோம்!

"இப்படிப்பட்ட விடுதலைப் போராட்டங்கள், எல்லா நாடுகளிலும் ஒரு தலைமுறைக்கு ஒரு தடவைகூட நடைபெறுவதில்லை. இத்தனை அரிய விடுதலைப் போராட்டத்தில் — நெடுங்காலத்திற்கு ஒருமுறை மட்டுமே நிகழும் விடுதலைப் போராட்டத்தில், இந்த நாட்டில் உள்ள சகல கட்சியினரும் கலந்துகொள்ளவேண்டும் என்றும் நாம் விரும்புகிறோம். எனவே, நாம் பிறர் மீது அதிகக் கோபம் கொண்டால், அவர்களுக்கு ஏற்பட வேண்டிய ஆர்வம் அரும்பாமல் போய்விடக்கூடும். ஆத்திரப்பட்டால்—படபடப்புடன் நடந்துகொண்டால், அவர்களை எல்லாம் நாம், நம் பக்கம் இழுப்பது கடினமாகிவிடக்கூடும்.

"இன்று நம் நாட்டின் நிலை என்ன? நமது பட்டுப் பீதாம்பரம் ஒன்று நம்மிடமிருந்து நழுவி, முள்மரம் ஒன்றின்மேல் விழுந்து பட்டுக் கொண்டிருப்பதைப் போலத்தான், நம் நாடும், நம்மிடமின்றி; வேறொரு ஆதிக்கபுரியினரிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

"முள்மரத்தில்பட்டுவிட்ட நமது பட்டுப் பீதாம்பரத்தைச் சேதப்படாமல் திரும்பவும் பெறவேண்டுமானால், பொறுமையோடு, கவனமாக முயற்சித்தாக வேண்டும்; இன்றேல், முள் மரத்திற்குச் சேதமேற்படாது — சேதமேற்படுவது

(4-ம் பக்கம் பார்க்க)

டில்லியில் 'சாணக்கியபுரி'!

புதுடில்லி, ஜூன் 21—

டில்லியில் நிர்மாணிக்கப்படும் 'சாணக்கியபுரி' வேகமாக வளர்ந்து வருகிறது என்று தெரியவருகிறது.

வெளி நாட்டுத் தூதுவர் அலுவலகங்களை அமைத்துக் கொள்வதற்காக இந்தச் 'சாணக்கியபுரி' நிர்மாணிக்கப்படுகிறது.

900 ஏகர் நிலப்பரப்பில், சுமார் 262 கட்டிடங்கள் அமைத்துக்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இவற்றில், சுமார் 26 இடங்களை, பல வெளிநாட்டு சர்க்கார்கள், தங்கள் தூதுவர் அலுவலகங்களை நிர்மாணித்துக்கொள்வதற்காக வாங்கியுள்ளனராம்.

183 இடங்களைத் தனிப்பட்டவர்களும், ஐந்து இடங்களை மாநில சர்க்கார்களும், மூன்றினை சில நிறுவனங்களும், ஒரு ஓட்டல் நிர்வாகி ஒரு இடத்தையும் வாங்கியுள்ளனராம்.

தாய் மொழியை சீரழிய விடாதீர்!

நாகரீகம் தோன்றுமுன் தோன்றிய தமிழ்— இன்று 'பிரச்சினை'க்கு ஆளாவதா?

இந்தி ஆதிக்கம் ஏனிந்த நாட்டில்?

மாநில மாநாட்டில் கண்ணதாசன்

திருச்சி வள்ளுவர் நகரில் நடைபெற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டில் 'மொழிப் பிரச்சினை'கள் என்ற தலைப்பில் தோழர் கண்ணதாசன் ஆற்றிய உரையின் சாரம் இங்கு தரப்படுகிறது.

"இந்த மாநில மாநாட்டில், இதுவரையில், எந்த மொழியின் இனிமையை நீங்கள் பருகிக்கொண்டிருந்தீர்களோ, அந்தத் தமிழ் மொழிக்கு இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் குறித்துத்தான் இங்கு பேசுகிறேன்.

"தமிழ் மொழி நமது தாய் மொழி—கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்—கடலைத் துளைத்து எழ் கடலைப் புகுந்து குறுகத் தரித்த குறளைப் பெற்ற தமிழ்—ஐம்பெரும் காப்பியங்களை, அகத்தை புறத்தை, சங்க இலக்கியங்களைப் பெற்றுள்ள தமிழ்—இன்று 'பிரச்சினை'யில் ஆழ்ந்திருக்கிறது என்பது, வருந்தத்தக்கது தான்!

"ஒரு காலத்தில், சீரும் சிறப்பும் பெற்று, மன்னர்களின் பாதுகாப்பும், மக்களின் பேராதரவும், புலவர்களின் தாலாட்டும் பெற்று, ஓங்கி வளர்ந்திருந்த தமிழ், இன்று 'பிரச்சினை'யில் ஆழ்ந்திருக்கிறது.

"தமிழ் வழங்கும், தமிழ் நாட்டிலும், தமிழ் வழங்கும் இலங்கையிலும், தமிழ் மொழிக்கு அவதிகள் பல நேர்ந்திருக்கின்றன.

"உலகத்திலேயே நாகரீகத்தின் அடிப்படை வேர்கள் இரண்டு மொழிகளிலிருந்துதான் வந்தன என்று கூறுவர்; ஒன்று—திராவிட மொழியான தமிழ் மொழி; மற்றொன்று—தமிழ் தோன்றிய காலத்தில் தோன்றியது அல்ல என்றாலும், பழங்கால மொழி என்று கூறப்படும் ஆரிய மொழியான சவமொழி—சமஸ்கிருதம்.

"உலகத்தின் வேறு பல பாகங்களில் மக்கள் பேசத் தெரியாதவர்களாக—தங்கள் எண்ணங்களை செய்கைகள் மூலமே பரிமாறிக் கொள்பவர்களாக இருந்த காலத்தில், தமிழ் மொழியில் சிறப்பான இலக்கியங்களும், சீரிய இலக்கணமும் தோன்றி வளர்ந்திருந்தன என்றுவரலாறு நமக்குக்கூறுகிறது.

"இன்னும், உலகில் வழங்கும் பல மொழிகளிலும், ஆரிய மொழியான சவ மொழியிலும்கூட, தமிழின் சொல்லாக்கம் இருப்பதை நாம் காணமுடியும்.

தமிழ் தோன்றிய காலத்தை ஒட்டித் தோன்றிய பல்வேறு மொழிகள், இன்று, உலகத்தில் வழக்கொழிந்து இறந்துபட்டுவிட்டன. ஆரிய மொழி கூட உயிருடன் மக்களிடை உலவும் மொழியாக இல்லை; உயிரற்ற சவமொழியாகத்தான் இருக்கிறது.

"தோன்றிய அன்று முதல் இன்றுவரை, தமிழ்தான், இளமை குன்றாது, கன்னித்தன்மை பாழ்படாது, ஓங்கி வளர்ந்து வந்திருக்கும் மொழியாகும்.

"அந்தத் தமிழ் மொழிக்குத் தான்—தாயகமாம் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் அவதிகள் நேர்வுற்றுள்ளன.

"தமிழ் நாட்டில், இன்று, தமிழ், அரசோச்சும் மொழியாக இல்லை! தமிழ் அரசியல் அலுவல்களுக்குப் பயன்படும் மொழியாக ஆக்கப்படவில்லை!

"தமிழ் மொழி வழங்கும் நாடு, 'தமிழ் நாடு' என்று அழைக்கப்படக்கூடாது என்கின்றனர் ஆட்சியாளர்!

"தமிழ் மொழியின் இடத்தில் இந்தி என்னுமோர் மொழியைத் திணிக்க, இன்றைய ஆட்சியாளர் முயற்சித்து வருகின்றனர்; பல்வேறு துறைகளில் சிறிது சிறிதாக இந்தியைப் புகுத்தி வருகின்றனர். இந்தியைக்கொண்டு தமிழ் மொழியின் இடத்தை நிரப்பி, தமிழின் வளர்ச்சியைத் தடுத்து, அதன் நிலையைக்குலைத்து அழித்துவிட எண்ணுகின்றனர், ஆதிபத்ய எண்ணம் கொண்டோர்!

"இலங்கையிலும் தமிழ் மொழிக்கு இன்று பிரச்சினைகள் பல தோன்றியிருக்கின்றன.

"இலங்கை சர்க்கார், தமிழ் மொழிக்கு, சிங்களத்தைப் போலவே சமநிலை தர—தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்க மறுத்து, சிங்களமொழியை மட்டுமே ஆட்சிமொழியாக்கிவிட நினைக்கின்றனர்! சிறுபான்மையினரான தமிழரின் உரிமையைப் பறித்துவிடத் திட்டமிடுகின்றனர்! இந்த நிலையை எதிர்த்து, இலங்கைத் தமிழர் அறப்போரில் ஈடுபட உறுதி பூண்டுள்ளனர்.

"தமிழ் மொழி வழங்கும் தமிழ் நாட்டைத் 'தமிழ் நாடு' என்று அழைக்கவேண்டும் என்ற தமிழர்களின் இயற்கையான ஆவலை மதிக்க மறுக்கும் சர்க்காரை நாம் பெற்றிருக்கிறோம் என்பதற்காக வெட்கப்பட வேண்டும்.

'உலகத்தில் பல்வேறு நாடுகள், தங்கள் தங்கள் தாய்மொழி அரசோச்சுவதற்காக உரிமையோடு கூடிய தனி அரசுகளைப்பெற்றிருக்கின்றனர்.

"ஆனால் இங்குதான், 'பல்வேறு மொழிகள் வழங்குகிற இந்தியா ஒரே நாடுதான்; அந்த இந்தியா முழுமைக்குமாக ஒரு மொழி வேண்டும்; அதுஇந்தி மொழியாகத் தான் இருக்கும்', என்று கூறிவருகிறார்கள்.

"இந்திமொழி, மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஒரு கலப்பு மொழி! இலக்கிய வளமோ, இலக்கண வரம்போ அற்ற ஒரு மொழி! அந்த இந்தி மொழி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த குறளைப் பெற்ற தமிழ் மொழியின்மீது ஆதிக்கம் செலுத்தும் என்று கூறிடுகிறார்கள்; தமிழ் மொழிக்கு, 'பிரச்சினை'யை உண்டுபண்ணுகிறார்கள்.

"இந்தியாவின் பொதுமொழி என்ற பெயரை இந்திக்கும் சூட்டி அதனை அந்தப் பெயருக்குத் தகுதி யுடைத்தாக்குவதற்காக, இலட்சக்கணக்கான—கோடிக்கணக்கான பணம் செலவிடுகிறார்கள்! எங்கெங்கிருந்தோ சொற்களைக் கடன் வாங்கி, இந்திச் சொற்களாக்கிக்கொண்டு வருகின்றனர்!

"ஒரு மொழி—இப்போதுதான் கோடிக்கணக்கான ரூபாய்

([illegible])

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—6—'56 வெள்ளி

அங்கு சென்றதே தவறு

ஒரு அரசாங்கம் செம்மையாகச் செயல்படுவதும் படாததும், நிரந்தரமாக உள்ள நிர்வாக இயந்திரத்தைப் பொறுத்ததாகும். அவ்வியந்திரத்தின் உறுப்புகளாக இருப்பவர்களில் பெரும் பகுதியினராக உள்ளவர்கள், பதிவு செய்யப்படாத அரசாங்க ஊழியர்களாவர்.

அப்பெரும்பான்மை ஊழியர்கள்தான், அரசாங்க நிர்வாகக் காரியங்கள் அனைத்திற்கும் உருவம் கொடுப்பவர்களாவர். அவர்களை அரசாங்க நிர்வாக அமைப்பின் இருதயம் எனக் கூறுவதும் பொருந்தக்கூடியதேயாகும்.

பொறுப்பான பணியினை மேற்கொண்டுள்ள அவர்களை இல்லாமையில் வைத்திருப்பது எந்தவகையிலும் நியாயமாகாது. அவர்களைக் கப்பிக்கொண்டிருக்கும் வறுமை, அவர்களைத் துளைத்துக்கொண்டிருக்கும் வாட்டம் அவர்கள் செய்துவரும் பணிகளிலும் பிரதிபலிக்கத்தான் செய்யும். எனவே, அவர்களுடைய நியாயமான குறைகளைக் களைந்து, குறைந்த அளவிலாவது திருப்திகரமாக வாழப் பார்த்துக்கொள்ளுவதுதான், மக்களாட்சியில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமையாகும்.

தனக்குள்ள இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் அமைச்சரவை அலட்சியமாக இருந்துவருகிறது என்பது, அவ்வூழியர் அமைப்பின் நீண்டகாலக் குற்றச்சாட்டாகும். ஆனால் அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்ற முடியாத அமைச்சரவையோ, அவசியமேற்பட்டாலும் ஏற்படாமற்போனாலும், அவர்களுடைய பணியின் சிறப்பைக் குறித்தும், வறுமையைத் தாங்கிக் கொள்ளுவதில் அவர்களுக்கிருந்துவரும் சகிப்புத் தன்மை பற்றியும், அடிக்கடி வற்புறுத்திக் கூறுவதில் மட்டும் தவறுவதே கிடையாது. அமைச்சரவையின் இச்செயல், வெந்த புண்ணைக் கோல் கொண்டு குத்துவது போலாகும்.

இந்தியப் பேரரசில் ஊழியம் செய்துவரும் தங்கள் போன்ற பதிவு பெறுத ஊழியர்களுக்கு, தங்களுக்குக் கொடுக்கப்படுவதைக் காட்டிலும் அதிகப்படியானசம்பளவிகிதமும், பஞ்சப்படி விகிதமும் கொடுக்கப்பட்டு வருகிறதை எண்ணுவதினால், இல்லாமையிலும் ஏமாற்றத்திலும் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கிற அவர்களுக்கு மேலும் எரிச்சல் ஏற்படுகிறது. எனவே, அந்த உயர்ந்த சம்பள விகிதத்தைக் காட்டி, அதற்குச் சரியாக தங்கள் ஊதியத்தையும் உயர்த்த வேண்டுமென்று அவர்கள் கோர முன்வந்தனர். அவ்வாறு கோருவதில் நியாய விரோதம் எதுவுமில்லை.

ஒரே வேலையைச் செய்யும் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஒருவகையாகவும், மாகாண ஊழியர்களுக்கு வேறு வகையாகவும் ஊதிய ஏற்பாடு செய்து செயலாற்றப்பட்டு வருவதற்கு எவர் பொறுப்பாளிகளோ, அவர்கள் மீதுதான் குற்றம் முழுவதையும் சுமத்த வேண்டும். எனவே உயர்ந்த ஊதியத்தைக் காட்டி அதற்குச் சமமாகத் தங்களுக்கும் ஊதியம் தரவேண்டுமெனக் கோரும், இங்குள்ள பதிவு பெறுத ஊழியர்களைக் காய்ந்து கொள்ளும் அமைச்சர்களை என்னென்பது? நிற்க,

இந்த அமைச்சர் அவைதான் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக்கழித்து வருகிறதே, இந்தியப் பிரதமர் நேருவிடம் சொன்னாலாவது, தங்கள் தேவைகள் ஓரளவில் பூர்த்தியாக வாய்ப்பு ஏற்படாதா என்ற ஆசையில் பதிவுபெறுத ஊழியர் அமைப்பு, ஒரு தூதுக்குழுவை டில்லிக்கு அனுப்பிற்று.

எதிர்பார்த்தபடி அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவு கிடைக்கவில்லையானாலும், யாரைப் பார்த்துக் குறையைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியதோ, அந்த உத்தமப் பிரதமரை சாதாரணமாகக் காணும் பெரும் பேறே, அத்தூதுக் குழுவிற்குக் கிட்டாமல் போய்விட்டது.

இந்தியப் பிரதமரைக் காண தூதுக் குழு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. வெளிநாடு செல்லும் உத்தேசத்துடன் இருக்கும் பிரதமர், தூதுக் குழுவைக் காண முடியாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

காண முடியாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், இந்தியப் பிரதமர் நின்றிருந்தாலாவது, நகை செய்பவனிடம் தானுக நாள்வைத்துக் கொண்டு திரும்புவதுபோல், மீண்டும் ஒருமுறை அந்தப் பெரியவரை சந்தித்துத் தேவைகளைத் தெரிவித்து பரிகாரம் கேட்கலாம் என்ற நம்பிக்கையில் தூதுக் குழு சென்னைக்குத் திரும்பி இருக்கக்கூடும். ஆனால், அத்தகு நம்பிக்கையையும கொள்வதற்கு இடமில்லாமலே, பதிவு செய்யப்படாத அரசாங்க ஊழியர்களின் விவகாரம் மாகாண ஆட்சியைப் பொறுத்தது—மத்திய ஆட்சி தலையிடுவதற்கு உரிமை கிடையாது—இந்திய அரசியல் சட்டம் அதைத்தான் திட்டமாகக் கூறுகிறது--எனப் பிரதமரின் காரியதரிசியும் வரவேற்பாளரும் கன்னத்தில் அறைவதுபோல், தூதுக் குழுவிடம் கூறிவிட்டார்கள்.

தனக்குத் தெரிந்த அரசியல் சட்டம், சென்னை மாகாண அரசாங்க ஊழியர்களுக்குத் தெரியாது, சட்டம் என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்துகொண்டு ஊர் திரும்பத்தான் சென்னையிலிருந்து தூதுக் குழு வந்திருக்கிறது என்று எண்ணிக்கொண்டு, இந்தியப் பிரதமரின் காரியதரிசி, தூதுக்குழுவிடம் சட்டப் பிரிவை சுட்டிக்காட்டி விளக்கி இருப்பது முதல்தரமான ஆணவமாகும். அந்த ஆணவத்திற்கு தக்க பதில் கூறவேண்டிய பொறுப்பு நமது பதிவு பெறுத ஊழியர்களைச் சார்ந்ததாகும்.

தங்கள் விவகாரத்தில் நியாயம் வழங்கும் பொறுப்பு யாருக்கு இருப்பதாகச் சட்டம் சொல்லுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, இந்தியப் பிரதமரைக் காண தூதுக் குழு டில்லி செல்லவில்லை.

தங்கள் குறைகளைக் கவனிக்கும்படி சென்னை அமைச்சரவையைத் தூண்ட, தமது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தும்படி இந்தியப் பிரதமரை நேரில் கண்டு வேண்டிக்கொள்ளலாம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில்தான் டில்லிக்குத் தூதுக் குழு சென்றது. ஆனல் கிடைத்ததோ, முதல்தரமான நையாண்டி!

உலக சமாதானத்திற்காக ஓயாது உழைக்கிறுரே, மக்களின் வறுமை கண்டு கண்ணீர் வடிக்கிறுரே, அவருக்கு எவ்வளவு பெரிய இருதயம இருந்தால் மக்கள் மீது அவ்வளவு பரிவு காட்டுவார், எனவே அவ்வளவு பரிவு காட்டும் பெரிய இருதயத்தில் தங்கள் குறை களைவதற்கும் இடமில்லாமலா போகும் என்ற நம்பிக்கையில், பரிகாரம் தேடி இந்தியப் பிரதமரை மட்டற்ற பாசத்தோடு காணச்சென்றது, சென்னை தூதுக்குழு. ஆனல் எதைக் கண்டு இந்தியப் பிரதமரின் இருதயத்தைப் பெரிதெனக் கற்பனை செய்து கொண்டு அவரைக் காண தூதுக்குழு சென்றதோ, அதையே, அதாவது உலக சமாதானம் தேடி வெளிநாடு செல்லும் விவகாரத்தையே, காண முடியாது என்பதற்கும் காரணமாகக் காட்டப்பட்டு விட்டது. வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்களின் உரசலிலும், சாற்றும் புகழ்மாலைகளிலும, நடத்தப்பெறும் விருந்து கேளிக்கைகளிலும் ஏற்படும் மகிழ்ச்சி, தங்களைக் காண்பதிலும இந்தியப் பிரதமருக்கு ஏற்படும் எனக் கருதி விட்டனர் போலும், நமது தூதுக் குழுவினர்! ஏமாற்றம் அடைந்த தூதுக் குழு, அங்கு சென்றதே தவறு என எண்ணுவது எதிர்பார்க்கக்கூடியதே!

இங்குள்ள அமைச்சரவையைக் கேட்டுக் கேட்டும் அவர்களுக்கு பரிகாரம் இதுவரை ஏற்படவில்லை. டில்லி சென்றதும் விழலுக்கிரைத்த நீராகி விட்டது. தங்கள் மாநாட்டுத் தீர்மானப்படி நடந்துகொள்ள வேண்டியதுதான் இனி பதிவு பெறுத ஊழியர்களுக்கு எஞ்சி இருக்கிறது.

பதிவு பெறுத தனது ஊழியர்களை, நேரடி நடவடிக்கையில் ஈடுபடும் கட்டத்திற்கு, சென்னை அமைச்சரவை தூரத்துகிறது. அதற்கு முழுதும் பொறுப்பேற்க வேண்டியதும் அந்த அவையேயாகும்.

நடவடிக்கை எடுப்பர்!

மைசூர், ஜூன் 20—

உணவுப் பொருட்களின் விலைவாசிகளைக் குறைக்க அரசியலார் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வர் என மைசூர் விவசாய அமைச்சர் சென்னபாசப்பா பொது மக்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

போதனு மொழியாக குஜராத்தி அமுலாகிறது

அகமதாபாத், ஜூன் 20—

குஜராத் பல்கலைக் கழகத்திலும், அத்துடன் இணைந்த கல்லூரிகளிலும் குஜராத்திய மொழி சென்ற ஆண்டைப்போலவே இவ்வாண்டும் போதனுமொழியாக அமுல் செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

முதன்முறையாக தந்தையின் சொத்தில் மகளுக்கும் பங்கு அளிக்கும் சட்டம்

வாரிசு உரிமை மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் அங்கீகாரம்!

புதுடில்லி, ஜுன் 18—

இந்து வாரிசு உரிமை மசோதாவுக்குக் குடியரசுத் தலைவர் அங்கீகாரம் அளித்துவிட்டார்.

இம்மசோதா சட்டமாவதை ஒட்டி 1947-ல் 'ரவ் குழு' சிபாரிசு செய்த இந்து சட்டத் தொகுப்பின் மிக முக்கியப் பகுதி முழுவதுமாக நிறைவேற்றப்படுகிறது. மேற்கண்ட சட்டத் தொகுப்பில் முதலில் நிறைவேற்றப்பட்ட பகுதி 1955-ம் ஆண்டு இந்து திருமணச் சட்டமாகும். இது, இந்துக்களின் திருமணம், திருமண ரத்து ஆகியவை பற்றியதாகும்.

நாடு முழுவதிலும் மரண சாசனம் எழுதிவைக்காமல் இறப்பவர்களின் வாரிசு உரிமை பற்றி ஒரே விதமான சட்டத்தை அமுலாக்கு வதா இந்து வாரிசு உரிமைச் சட்டத்தை இயற்றுவதன் நோக்கமாகும். இச்சட்டத்தில் சில முக்கிய அம்சங்கள் இருக்கின்றன. இவை, இந்திய சமூக வரலாற்றில் இச்சட்டம் இயற்றப்படுவதை ஒரு முக்கிய நிகழ்ச்சி ஆக்குகின்றன.

இச்சட்டத்திற்கு இந்துக்கள் அனைவரும் கட்டுப்பட்டவர்களாவர். இந்துக்கள் எனும் வார்த்தை —இஸ்லாம் மதம், கிறித்துவ மதம், பார்சிகள் மதம், யூதர்கள் மதம் ஆகியவற்றைத் தழுவாதவர்கள் அனைவரையும் குறிக்கும்.

பெண்களும் ஆண்களைப் போன்று பரம்பரைச் சொத்துரிமை கிடைப்பது இம்மசோதாவினுல் ஏற்படும் பெரும் மாறுதலாகும்.

கடந்த காலத்தில் பெண்களுக்குப் பரம்பரை உரிமையாகச் சொத்து கிடைத்தஇடங்களிலும் அந்தச் சொத்துக்களின் மீது அவர்களுக்கு இருந்த உரிமை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக சில சந்தர்ப்பங்கள் தவிர மற்றபடி அவர்கள் இச்சொத்துக்களை விற்பனை செய்ய முடியாது. மேலும் தம் வாழ்நாள் வரையிலுமே இச்சொத்துக்கள் அவர்களுக்கு உரியதாக இருக்கும். தற்பொழுது இயற்றப்பட்டுள்ள சட்டம் இக்கட்டுப்பாடுகளை நீக்குகிறது.

முதல் தடவையாக இச்சட்டம் தந்தையின் சொத்தில் மகளுக்கும் பங்கு அளிக்கிறது தந்தை தாமாக சம்பாதித்த சொத்திலும், பரம்பரை உரிமையாகப் பெற்ற சொத்திலும் மகளுக்குப் பங்கு கிடைக்கிறது.

ஆண், பெண் வாரிசுகளுக்கு குடும்ப வீட்டில் வசிப்பதற்கான உரிமைகளையும் இச்சட்டம் அளிக்கிறது.

'தோளோடு தோள்'

இணைந்து போராடுவார்களாம்

உலக சமாதானத்திற்கு எதையும் செய்யத் தயாராக உள்ளனராம்

மாஸ்கோ, ஜுன் 20—

"அடுத்த யுத்தம் எங்கள் மீது தொடுக்கப்படுமாயின், சோவியத் யூனியனும்-யூகோஸ்லாவியாவும் தோளோடுதோள் இணைந்துப் போரிடும்; உலக சமாதானத்திற்கென எதையும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிருேம்"

என்று, சோவியத் பாதுகாப்பமைச்சர் மார்ஷல் ஜியார்ஜ் ஜுகாவ் தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டையில் ஒரு தொழில் பள்ளியாம்!

திருநெல்வேலி, ஜுன் 19—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் சில வேலைகளைத் துரிதப் படுத்தும் வகையில் பாளையங்கோட்டையில் அடுத்த திங்கள் முதல் ஒரு தொழில் பள்ளி துவங்கப்படவிருக்கிறதாம்.

இப்பள்ளிக்குத் தேவையன உபகரணங்கள், மரச் சாமான்கள் முதலியன வாங்குவதற்காக சர்க்கார் ரூ. 4,25,000 ஒதுக்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

'ஆர்க்', 'காஸ்வெல்டிங்', 'லைட் மெட்டல் காஸ்டிங்', 'எலக்ட்ரிக் வயரிங்', 'பிட்டிங்', 'ஆட்டோ சர்வீசிங்', 'பவுண்டரி' முதலிய வகுப்புகளுக்கு ஒவ்வொன்றிலும் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முதலிடம் தரப்படும் என்றும், பயிற்சி பெறுவோருக்கு தினம் எட்டணு வீதம் உபகாரச் சம்பளம் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

திருநெல்வேலியில் ஒரு 'தொழில் எஸ்டேட்' ஆரம்பிக்கப்படும் என்றும், அதற்காக சர்க்கார் பேட்டை இரயில்வே நிலையம் அருகே 40 ஏக்கர் நிலம் 'ஆர்ஜிதம்' செய்யப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஐந்தாண்டு முதல் ஆருண்டுத் தவணையில், திருப்பித் தரும் வகையில், பெரும் இயந்திர முதலீட்டுப் பொருள்கள் வாங்குவதறகு, ரஷ்யா இந்தோனேஷியாவுக்குக் கடன் தருவதற்கு முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

ஆக்க வேலையில் அணுசக்தியின் ஆற்றல்

உணவுப் பொருள் அதிகரிப்புக்கு வழிகோலுகிறதாம்!

பயிர்களை நோயற்றவையாகவும், வறட்சியாலும், மழையாலும் பாதிக்கப்படாதவையாகவும் செய்ய முடியுமென அணுசக்தி மூலம் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வருகிறதாம்!

உண்மையில், எல்லா பண்ணைக் கஷ்டங்களுக்கும் எதிரான முன்னேற்றம் மிக அதிகமாகும்—காய்கறிகளே தம் களைகளைக் களையும் நாளும் வரக்கூடுமாம்!

அணுக் கதிரியக்கம் மூலம் உணவைப் பாதுகாத்துக்கொள்வதில் ஏற்படும் முன்னேற்றம், 'பெரும் அளவில் உணவு சேமிப்பு ஏற்பட்டு, எல்லோரும் சாப்பிட நிறைய உணவு கிடைக்குமென்றும் உறுதிப்படுத்துகின்றது' என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு தர மனு

மஞ்சள்காமாலை நோய் பரவியதின் எதிரொலி

புதுடில்லி, ஜுன் 20—

மஞ்சள் காமாலை கிருமிகள் கொண்ட தண்ணீர், டில்லி தண்ணீர்—சாக்கடை கூட்டு போர்டு மூலம் விநியோகிக்கப்பட்டதால், தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அறிவு தடுமாறியது என்றும், எனவே, இதற்கு நஷ்டஈடாக ரூ. 1 இலட்சம் தரவேண்டுமெனவும் எஸ் கே ஓபிராய் என்ற புதுடில்லிவாசி நீதிமன்றத்தில் மனு செய்துள்ளார் எனத் தெரியவருகிறது.

தனி மாஜிஸ்திரேட் — தனி டாக்டர்!

மேற்கு பாகிஸ்தான் அரசியலார், பக்தூனிஸ்தான் பிரச்சினை சம்பந்தமாக மக்களிடையே கிளர்ச்சியை மூட்டிய குற்றத்திற்காக சின்னுட்களுக்கு முன்னர் கைதாகியுள்ள செஞ்சட்டைத் தலைவர் கான் அப்துல் கபார்கானை விசாரிப்பதற்கென ஒரு தனி 'மாஜிஸ்டிரேட்'டை நியமித்துள்ளார்களாம். கபார்கானில் உடல் நிலையைக் கவனித்துக்கொள்ள ஒரு தனி டாக்டரும் நியமிக்கப்பட்டுள்ளாராம்.

‘மூத்த மகனுக்கு பாகப் பிரிவினை நடந்தான பிறகு இளையவனுக்குரிய பாகத்தைத் தர மறுக்கலாமா?’

‘திராவிட நாடு கோருவது எதற்காக?’

பரமக்குடியில் அண்ணா விளக்கம்

திராவிட நாடு ஏன் அமையவேண்டும்? தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடுவதின் நோக்கம் என்ன?—என்பவற்றை விளக்கி, அண்ணா அவர்கள் பரமக்குடியில் ஆற்றிய சொற்பொழிவு நேற்றும், முன்தினமும் வெளிவந்தன; இறுதிப்பகுதி இங்கு தரப்படுகிறது:—

“தமிழ், மலையாளம், கன்னடம் தெலுங்கு வழங்கும் பகுதிகள் திராவிட மொழி வழங்கும் பகுதிகள் எனவும், இந்தத் திராவிட மொழிகள் வழங்குவோர் திராவிட இனமக்கள் எனவும், ஆராய்ச்சியாளர்கள்—வரலாற்று வல்லுனர்கள் கூறியிருக்கின்றனர்; இந்த வரலாற்று ஆதாரங்களையும், நடைமுறையில் இன்றும், ‘வடவர் வேறு—தென்னவர் வேறு’ என்ற நிலையான உண்மையையும், வடநாட்டிற்குத் தென்னாடு இன்று அடிமைப்பட்டிருப்பதைச் சான்றாகவோடு விளக்கியும்தான், நாம் திராவிட இனமக்களுக்கு விடுதலை கோருகிறோம் — திராவிட நாடு அமையவேண்டும் என்று கோருகிறோம்.

“இப்படி திராவிட நாடு அமைவதால், நமது பாதுகாப்பு ஒன்றும் கெட்டுவிடாது. நம் நாட்டிற்கு இயற்கையான பாதுகாப்புகளே ஏராளம். மூன்று பக்கத்திலும், எதிரிகளால் எளிதில் கடக்க முடியாத கடல்கள்! அதைத் தாண்டினால், கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலைகள்! உயரே விந்திய மலை! இத்தனைக்கும் பிறகும், எதிரிகள் நாட்டிற்குள் வந்துவிட்டாலும், அவர்களை முறியடிக்க—நாட்டைக் காக்க—போராடிப் போராடிப் பயிற்சி பெற்ற பரம்பரை வழிவந்த மக்கள், நிச்சயம் போராடுவார்கள்!

“திராவிட நாடு அமைவதால் வடநாட்டிற்கும் நமக்கும் தீராப் பகை மூளும் என்றும் எவரும் அஞ்சத்தேவை இல்லை. பிரிட்டிஷார் வெளியேறிய பிறகு, இந்தியாவிற்கும்—இங்கிலாந்திற்கும் என்ன, போர் மூண்டுவிட்டதா? விரோதம் முற்றியிருக்கிறதா என்றால், இல்லை; மாறாக, நட்புறவு வளர்ந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

“அப்படியிருக்க, திராவிட நாட்டிற்கும்—வடநாட்டிற்கும் விரோதம் ஏற்படும் என்று எடுத்துக் கூறுவதும் தவறு!

“பாகிஸ்தான் பிரிவினைக்கு உடன்பட்டான பிறகு, திராவிட நாடு பிரிவினைக்கு உடன்பட மறுப்பது எந்தவகையாலும் நியாயம் என எவரும் ஒப்பமாட்டார்களே!

“மூத்த மகனுக்கு பாகப் பிரிவினை நடந்தான பிறகு, இளையவனுக்கு அவனுக்குரிய பங்கைத் தர மறுத்தால் உலகம் என்ன சொல்லும்?

“பாகிஸ்தானாவது, என்றுமே 1947-க்கு முன் ஒரு நாடாக இருந்ததில்லை; பாகிஸ்தான் என்ற ஒரு நாடே 1947-க்குப் பின்தான் உருவாயிற்று! ஆனால், நாம் கேட்கும் திராவிட நாடு, ஒரு காலத்தில் ‘நாடாக’ இருந்தது உண்டு.

“அந்த நாட்டைத்தான், இன்று வடநாட்டவர் பிடித்துவைத்துக் கொண்டு தர மறுக்கிறார்கள். அவர்களிடமிருந்து நமது நாட்டை—நமது முன்னையர் நாட்டை மீட்டாக வேண்டும் என்பதற்குத்தான் தி. மு. கழகம் ஒரு தேசிய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது.

“நம் நாடு விடுதலை பெற்றால், நம்மிடம் உள்ள ஏழ்மையைப் போக்கடிக்க முடியும்; வறுமையை ஒழிக்க முடியும்; வாட்டத்தை நீக்க முடியும்; வாழ்வுதர முடியும்; வாழ்வை வளமிக்கதாக்க முடியும்; தொழிலை வளர்க்க முடியும்; தலை நிமிர்ந்து மானத்தோடு உலகில் நடமாட முடியும்!

“நம்முடைய நாடு, வளமிக்க நாடு என்பதை நீங்கள் அறியீரோ!

“நம்முடைய மக்கள் உழைத்து, நாட்டை உயர்த்துவதற்கேற்ற தோள் வலிமைபெற்றவர்கள் என்பதில், எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

“எனவே, இந்த நாட்டு மக்களுக்கு என்று ஒரு சர்க்கார் ஏற்பட்டு, எல்லோருக்கும் உழைப்பை நல்க வேலை தரப்படுமானால், நாம் உலகத்தில் பல நாட்டவரைவிட சுகமான வாழ்வைப் பெற முடியும்.”

பெங்களூர் தோழர்களுக்கு:

“பெங்களூரில், தி. மு. கழக இலட்சியங்களைப் பரப்புவதாக பல்வேறு நாடக மன்றங்களும், கலை அரங்கங்களும் குளுரைத்துக்கொண்டு, பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையேயும் சிறந்த பணியாற்றிவருவது கண்டு மகிழ்கிறேன்; எனது இதயங்கனிந்த நன்றியையும் அவற்றிற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

“ஆனால், அவற்றில் பல அமைப்புகள் தி மு கழகக் கொடியையும், அதன் தலைவர்களின் படங்களையும் பயன்படுத்துவதோடு, பல இடங்களில் கொள்கைகளுக்கு முரண்பட்ட கருத்துக்களை தி. மு கழக இலட்சியமென பறைசாற்றுகின்றன. இந்தப் போக்கு, கண்டனத்துக்குரியது; எனவே, நமது இயக்கக் கொடியையும், தலைவர்களின் படத்தையும் பயன்படுத்த விரும்புவோர் தமது அமைப்புகளை மாவட்ட தி. மு கழகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மாவட்ட தி. மு. கழகம் அத்தகைய மன்றங்கட்கு உதவி அளிப்பதோடு, சிறப்படையக் கூடியவகையில் கண்காணித்துக் கொள்வதற்கும் இயலும்

“வேண்டுமென்றே தவறான கொள்கைகளை நமது இலட்சியமென கூறிவரும் புரட்டு மன்றங்களை நீதிமன்றத்தில் நிறுத்தவும், நேர்மையான நமது ஆதரவான மன்றங்கள் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆளாகாமல் பாதுகாக்கவும் மேற்படி பதிவு முறை, மேற்கொள்ளப்படுகிறது; எனவே, பதிவாகும் மன்றங்கள் தி. மு. கழகத்துடன் இணைந்துவிட்டன என்று பொருளல்ல; கலை ஆர்வம்மிக்க அன்பர்களும், மன்றங்களும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்,”

என்று, பெங்களூர் மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அறிவித்துக்கொள்ளுகிறார்.

சாத்தூர், விருதுநகர் கூட்டங்களில் அண்ணா

இராமநாதபுரம் மாவட்டத்தில் எழுச்சிமிக்க நிகழ்ச்சிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா சுற்றுப் பயணத்தின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி சாத்தூரில் துவங்கிற்று.

16—6—56 மாலை 6-45 மணியளவில் அண்ணா அவர்கள் தோழர்கள் மதுரை-எஸ் முத்து, முகவை-ஆர். எஸ் பாண்டியன், எம். எஸ் இராமசாமி, இல. ம. சவுந்திர பாண்டியன், காஞ்சி-பாபு ஆகியோருடன் சாத்தூர் வந்து சேர்ந்தார்கள்.

சாத்தூர் கடைவீதி அருகில் உள்ள மைதானத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள்—ஏழாயிரம் பண்ணை, கொல்லபட்டி முதலிய ஊர்களிலிருந்தும், கோயில்பட்டி போன்ற நெல்லை மாவட்ட ஓரத்தில் உள்ள ஊர்களிலிருந்தும் குழுமியிருந்தனர்.

கூட்டம் துவங்கும் முன்புவரை கழகத் தோழர்கள் பலர், கழகப் பண் இசைத்தனர்.

பின்னர், உள்ளூர் கிளைக் கழகச் செயலாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தோழர் எஸ். முத்து கூட்டத்திற்குத் தலைமை ஏற்று, கழகத்தின் இலட்சியம், கொள்கைகள் குறித்து சுருக்கமானதோர் உரை நிகழ்த்தினார்.

அடுத்து, தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர், முறையே டில்லியின் ஆதிக்கத்தைக் குறித்தும், மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்தும் விளக்கம் தந்து பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேசுவதற்கு முன்பாக எண்ணற்ற கழகக் கிளைகள், மன்றங்கள் சார்பாக மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர், அண்ணா அவர்கள், அரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த உணவு அருந்திவிட்டு, அண்ணா அவர்கள் 10-15 மணிக்கு, இதர தோழர்களுடன், விருதுநகர் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக காரில் புறப்பட்டார்கள்.

விருதுநகரில்:

சாத்தூர் கூட்டத்தை முடித்துக் கொண்டு அண்ணா அவர்கள் இதர தோழர்களுடன், சுமார் 10-40 மணிக்கு விருதுநகர் வந்து சேர்ந்தார்கள்.

எல்லா ஊர்களையும் போலவே விருதுநகரிலும், மாரியம்மன் கோவில் மைதானத்தில் சுமார் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்.

இரவு 9-30 மணிக்கே கிளைக் கழகச்செயலாளர் தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் துவங்கி நடந்துகொண்டிருந்தது. தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி அவர்கள் கழகக் கொள்கைகளையும், அரசியல் நிலைகளையும் விளக்கிப் பேசிக்கொண்டிருந்தார்.

அண்ணா அவர்களின் வருகையை, கூடியிருந்த பல்லாயிரம் மக்களும் எழுப்பிய பேராரவாரம் அறிவித்தது.

பின்னர், தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகவை - ஆர். எஸ். பாண்டியன், மதுரை எஸ். முத்து ஆகியோர் சிறிதுநேரம் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், அரசியல் நிலைகளை விளக்கியும், கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

அண்ணா அவர்கட்கும், இதர தோழர்கட்கும், ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக விருதுநகர்த் தோழர்கள் செய்திருந்தனர்.

கூட்டத்திற்கு திரு. வி. வி. இராமசாமி (நாடார்) எம். எல். ஏ அவர்களும் வந்திருந்தார்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவின்ற பின் கூட்டம் இரவு சுமார் 2 மணிக்கு முடிவுற்றது.

கூட்டம் முடிந்ததும், கழகத் தோழர்களுடன் சிறிதுநேரம் உரையாடிவிட்டு அண்ணா அவர்கள் இதர தோழர்களுடன் மதுரை புறப்பட்டார்கள். (ந. - தி.)

கே. ஜி. சின்னராஜ் உருவப் படத் திறப்பு

கோலார் தங்கவயல் தி. மு. கழக முன்னணி வீரரும், தொழிலாளர் இயக்கத் தலைவர்களில் ஒருவரும், ஆண்டர்சன்பேட்டை தி மு கழகச் செயலாளருமான காலஞ்சென்ற தோழர் கே ஜி. சின்னராஜ் அவர்களின் உருவப் படத் திறப்பு விழா 18—6—56 மாலை 6 மணிக்கு, கோலார் சந்திரர்க்கம் ‘சவுத் டாங்க்’ திடலில் நடைபெற்றது. சர்வகட்சித் தலைவர்களும், தொழிலாளர் தோழர்களும், பொதுமக்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர் பெங்களூர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமை வகித்துத் தோழர் சின்னராஜ் செய்துள்ள இயக்கப் பணியினை விவரித்தார்.

அடுத்து, கன்னட மாநில சட்டமன்ற உறுப்பினர் பி. எம். சாமித்துரை, மாணவர் சங்கச் செயலாளர் வி. முத்துக்குமார், உரிமம் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் துணைத் தலைவர் இராவணச் சந்திரன், எம். நெடுஞ்சேரலாதன் ஆகியோர், மறைந்த வீரர் சின்னராஜ் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைக்கும், தொழிலாளர் நலனுக்கும் ஆற்றிய அரும் பணியினை எடுத்துக் கூறினர்.

இறுதியாக தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தோழர் சின்னராஜ் அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்து, அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும், அதற்கு முன்னதாக சுயமரியாதை இயக்கத்திலும், பொதுவாக இப்பகுதியிலுள்ள தொழிலாளரின் நல்வாழ்வுக்கும் அவர் செய்துள்ள சிறந்த பணியினை விவரித்து கூறியதுடன், தலைமைக் கழகச் சார்பில் அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

தங்கவயல் தாலுகா காங்கிரஸ் கமிட்டி, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகம் ஆகியவைகளின் செயலாளரிடமிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு, கே. ஜி. துரையப்பா நன்றி கூறினர்.

‘பம்பாய் மராட்டியத்துடன் இணைவதே நியாயம்’

‘மக்கள் கருத்தை அறிவதற்கு ஐந்தாண்டுகள் தேவை இல்லை’

டில்லிக்கு ‘நவ இந்தியா’ தரும் பதில்.

“பார்க்கப்போனால் பம்பாய் நகரம் நியாயமாக மகாராஷ்டிரர்களுக்குத்தான் கிடைக்க வேண்டும். இராஜ்ய சீரமைப்புக் கமிஷன் மெம்பர்களில் ஒருவரும் இதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

“பம்பாய் இராஜ்யத்தை இனி மேலும் இருமொழி இராஜ்யமாக நீடிக்க வேண்டுமென்று கமிஷன் சிபாரிசு செய்திருந்ததை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக பம்பாய் இராஜ்யத்தை குஜராத், மகாராஷ்டிரப் பிரதேசங்களாக மொழி அடிப்படையில் பிரிக்க அவர்கள் முடிவு செய்தார்கள்.

“பன்மொழி இராஜ்யத்திற்குப் பதிலாகத் தனிமொழி இராஜ்யக் கொள்கை எப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டதோ, அத்துடன், பம்பாய் நகருக்குள்ள ‘பொது அந்தஸ்தும்’ மாறிவிடுகிறது. மொழி பூகோள ரீதியில், அது, ஒன்றுபட்டிருக்கும் மகாராஷ்டிரத்துடன் இணைத்து விடுவதுதான் பொருத்தமானது. பம்பாய் நகரை மகாராஷ்டிரத்துடன் இணைக்கக் கூடாதென்பதற்கு, சர்க்கார் இதுவரை எவ்வித திருப்திகரமான பதிலும் அளிக்க முடியவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

“விருப்பு வெறுப்பு பாரபட்சமற்றமுறையில், இப்பிரச்சினையைப் பரிசீலனை செய்கின்றவர்கள், மகாராஷ்டிரர் கோரிக்கையிலுள்ள நியாயத்தை ஒப்புக்கொள்ளவே செய்வார்கள்.

‘பம்பாய் நகரை ஐந்தாண்டுகளுக்கு மத்திய சர்க்கார் நிர்வாகத்துக்கு உட்படுத்தவும், அதன் பிறகு மக்கள் கருத்தையொட்டி முடிவு செய்யவும் அவசியமிருப்பதாக நாம் கருதவில்லை. அப்படியும் மக்கள் கருத்தை அறிய தாயிருந்தால், அதை இப்பொழுதே செய்துவிடுவது மேலானது. ஐந்து வருடங்கள்வரை விட்டிருந்தால், அதுவரை இது ஒரு ‘எரியும்’ பிரச்சினையாகவே இருந்துகொண்டிருக்கும்; அதனால் ஐக்கியமும், அபிவிருத்தி வேலைகளும் பாதிக்கப்படும்.”

—இவ்வாறு, 19-6-56 ‘நவ இந்தியா’ இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

வளருகின்ற வடக்கிற்கு மேலும் சலுகைகள்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெருகிவரும் பிரயாணிகள், சரக்குப் போக்குவரத்துத் தேவைகளைச் சமாளிப்பதற்காக, இரயில் பாதை சக்தியை அதிகப்படுத்தும் பொருட்டு, கான்பூருக்கும் — அலகாபாத்துக்குமிடையேயுள்ள இரயில் பாதை இரட்டைத் தட மார்க்கமாக அமைக்கப்படும்.

மேற்படித் திட்டத்தின் முதலாவது கட்டமாக 60 மைல் தூரத்துக்கு இரட்டைத் தடம் அமைப்பதற்கு இரயில்வே போர்டு ரூ. 2,61,00,000 அனுமதித்திருக்கிறது.

தென்னாட்டில் கிடைக்கும் இறால் மீன்!

ரோம் நாட்டின் வாழ்க்கைக்கு வழிகோலுகிறது?

ரோம்—

இந்தியாவின் மலபார் கடற்கரையை ஒட்டி 140 மைல் நீளத்துக்கு நிறைய இறால் மீன் இருப்பதைக் கண்டுபிடித்திருப்பதால், இறால் மீன் பிடிக்கும் தொழிலும், நாட்டு உபயோகத்துக்கும்—வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இறால் மீன்களை சேமிக்கும் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று உணவு விவசாய ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

மற்ற முன்னேற்றங்களுடன் இந்திய மீன் பிடிப்போரிடையே இயந்திரப் படகுகள், நைலான் வலைகள், மற்ற நவீன மீன் பிடிப்புக் கருவிகளுக்குத் தேவை ஏற்பட்டுள்ளதாம்.

அண்ணா இலட்சிய பரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது பட்டுப் பீதாம்பரத்திற்குத் தான்!

"அதுபோல, அடிமைப்பட்டு விட்ட நமது தாயகத்தை மீட்க, போரில் ஈடுபட்டிருக்கும் நாம் மிகக் கவனமுடன், பொறுமையுடன், ஆத்திரத்திற்கு அடிமைப் பட்டுவிடாமல் நடந்துகொள்ள வேண்டும்.

"இன்று, நாடு மீட்கும் நற்பணியில் ஈடுபட்டிருக்கும் நம்மைத் தாறுமாறாகப் பேசி, தாக்கி, அழித்து ஒழித்துவிட பலர் திட்டமிடுகிறார்கள் என்பது உண்மைதான்.

'அவர்களுக்கு நாம் கூறக் கூடியதெல்லாம், 'கடந்த ஏழாண்டு காலத்தில், அப்படி கழகத்தை அழித்துவிட முயற்சித்தபலராலும் அது முடியாது போய்விட்டது; கழகம் வளர்ந்தோங்கி வருகிறது'—என்பதுதான்!

"காமராசர், இன்று நம்மைப் பார்த்து—கழகத்தவரை நோக்கி, இவர்கள் எல்லாம் 'ரௌடிகள்' என்று கூறியதாகச் செய்தி பார்த்தேன்.

"காமராசர், நம்மைப் பார்த்து விட்டு 'ரௌடி'கள் என்று கூறுகிறார் என்றால், இவருக்கு நாட்டில் உண்மையான 'ரௌடி'கள் எனபோர் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?—என்பதுகூடத் தெரியவில்லை என்றுதான் பொருள் படும்!

"அண்மையில், பெரும் பணச் செலவுசெய்து, பம்பாய் நகரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூட்டினார்கள்; அப்போது, 'பம்பாய் நகரம் மராட்டியருக்கு இல்லை,' என்று சொன்ன ஒரே காரணத்திற்காக, கமிட்டிக் கூட்டத்திற்கு வந்த ஒரு காங்கிரசார்கூட கதர் குல்லாய் அணிந்து கொண்டு வீதியில் நடக்க முடியவில்லை.

"மந்திரிகள் பலரின் கார்கள் தாக்கப்பட்டிருக்கின்றன! நேரு பண்டிதர் பேசிய கூட்டத்தில் பெரும் குழப்பம், கலாட்டா!

"இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரம் என்று தேசிய ஏடுகள் எழுதின! மருமகள் மெத்த உத்தமி—என்று, மாமியாரே கூறினால், மருமகள் உண்மையிலேயே மிக மிக உத்தமியாகத்தானே இருக்க வேண்டும்? தேசிய ஏடுகளின் மதிப்பு 50 ஆயிரம் என்றால், குறைந்தது, 5 இலட்சம் பேர்களேனும் ஈடுபட்டிருந்திருக்கவேண்டும், இந்த ஆர்ப்பாட்டங்களில்! அவர்களில் புகுந்திருந்த சிலர்தான், மந்திரிகளின் கார்களைக் கற்களைக் கொண்டு தாக்கவும், குழப்பத்தை விளைவிக்கவும் முற்பட்டதாக ஏடுகள் கூறுகின்றன.

"இம்மட்டுமா அவர்கள் செய்தார்கள்? வைக்கோலால் பொம்மை ஒன்று செய்து, அதற்கு கதராடை அணிந்து, குல்லாய் மாட்டி தெரு விளக்குக் கம்பத்தில், தூக்கு மாட்டி வைத்திருக்கிறார்கள்—'பம்பாய் மராட்டியருக்கு இல்லை' என்று எந்தக் காங்கிரசாராவது, பேசினால் அவர்களுக்கு இந்தக் கதிதான் என்பதை நினைவூட்டுவதைப்போல!

"இது போன்று, எங்கே 'ரௌடி'கள் இருக்கிறார்கள் என்பதை பம்பாய் போய் விட்டுவந்தும் தெரிந்து கொள்ளாது, காமராசர், நம்மைப் பார்த்து 'ரௌடி'கள் என்று கூறுவது நமக்கு விந்தையாகவிருக்கிறது.

"நம்மீது ஏதேனும் பழிசுமத்தி நாட்டு மக்களிடத்தில் நம்மைப் பற்றிய தவறான கருத்தை உண்டாக்க முயற்சிக்கிறார்போலும் அவர்!

"கோவிலுக்குள் ஏதோ செருப்புப் போட்டுக்கொண்டு நமது கழகத் தோழர்கள் போனதாகக் கூறி, 'இது ரௌடிகள் செயல்' என்று வர்ணித்தாராம், காமராசர்!

"எவரேனும் அப்படிச் செய்திருந்தால், காமராசர், தம்மிடமுள்ள அதிகாரத்தின் துணை கொண்டு தண்டிப்பதை நாம் தடுக்கவில்லை. இல்லையேல், இன்னின்ன தோழர்கள் அப்படி நடந்துகொண்டனர்என்று நம்மிடம் கூறுவாரேயானால், நாம் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். கழகத்தில் அப்படிப்பட்ட கண்ணியக் குறைவானவர்களை வைத்துக் கொள்ள நாம் என்றுமே விரும்பியதில்லை.

"நாம் யாரையோ ஒரு சாரார் மீது பகை கொண்டிருப்பதாக வேறு பழி சுமத்துகிறார்கள்; அதுவும் தவறு! நமக்கு தனிப்பட்டவர் எவர் மீதும் பகை இல்லை என்பதை நான் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

"அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர், ஐதராபாத் நகரில் என்று கருதுகிறேன்—சின்னாட்களுக்கு முன் பேசும்போது, 'செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ள முன்பெல்லாம், லட்டு முதலிய பொருள்களை எல்லாம் பார்ப்பனருக்குத் தந்த தென்னாட்டு மக்கள், இப்போது அவர்களுக்கு அப்படித் தருவதில்லை; சீர்திருந்தி வருகிறார்கள்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்-பார்ப்பனர் பற்றி, காங்கிரஸ் தலைவர் தேபர் இப்படிக் கூறுகிறார். நாம், 'பார்ப்பனர் நெஞ்சத்தில் உள்ள வஞ்சகம், நச்சுத்தன்மை அழிந்துபடவேண்டும்' என்றுதானே கூறிவருகிறோம்? இது, 'பார்ப்பனர் மீது நமக்குத் தீராப் பகை' என்பதாகாது!"

[பேச்சு முடியவில்லை தொடர்ந்து வெளிவரும்.]

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

★

தி. மு. கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, 22—6—56 முதல் அந்தந்த கிளைகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

என். வி. நடராசன்
துணைப் பொதுச் செயலாளர்
தி. மு. கழகம்

'அறிவகம்'
சென்னை-13
22-6-56

என். வி. நடராசன்

சுற்றுப் பயணம்

★

ஜூன் 26 : முருக்கப்பட்டி (துறையூர்)

தென்ஆற்காடு மாவட்டத்தில் :

ஜூன் 27 : சோழபாண்டியபுரம்
„ 28 : அரசம்பட்டு
„ 29 : சோழம்பட்டு
„ 30 : உலகுடையாம்பட்டு

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

23—6—56 இரவு 7 மணியளவில், சென்னை—கொருக்கையம்பதி, 15, நாகப்ப நாயகன் தெரு, கழகப் பணிமனையில் தோழர் உ. ப. சங்கரன் தலைமையில், 'இலக்கை தமிழர் நிலை' என்னும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், மன்றத் தோழர்களும் பேசுவர்.

சூளை நகர இளைஞர் கழகம்

23—6—56 மாலை 6-30 மணியளவில், மாணிக்க செட்டித் தெரு, கழக மனையில தோழர் எஸ். எம். பாசில், 'புத்த கலையும் கலாச்சாரமும்' என்ற தலைப்பில் பேசுவார்.

கழகக் கூட்டம்

★

குளித்தலை
வ. உ. சி. சதுக்கத்தில்
24—6—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
டி. பி. அழகமுத்து

பேசுவோர்:
மு. கருணாநிதி
அம்பில் தருமலிங்கம்
தி வீ. முத்துகிருஷ்ணன்

★

திருக்கழுக்குன்றம்
தெற்கு வீதியில்
25—6—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
தி. ஆ. சண்முகம்

பேசுவோர் :
கண்ணதாசன்
க. குருசாமி
எம். எஸ். ஏ. வகாப்

★

நரசிங்கன்பேட்டை
25—6—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
என். எஸ். வாசன்

பேசுவோர்:
சத்தியவாணிமுத்து
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தர ராசன்
கோ. சி. மணி

சென்னை 27-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

24—6—56 பிற்பகல் 2 மணியளவில், இடைப்பாளையம், எண் 32, அனுமந்தராயன் கோயில் தெருவிலுள்ள தோழர் ஆ. இராசன் மனையில், கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது, தேவைப்படும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படுவர்; முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை 8-வதுவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

24—6—56 காலை 8-30 மணியளவில், 28, முத்துகிருஷ்ணன் தெருவிலுள்ள இல்லத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 14-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு :

24—6—56 காலை 9-மணியளவில், கிளைக் கழகத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

பூவிருந்தவல்லி தி. மு. கழக வழக்கு நிதிக்காக

சிறப்புக் கூட்டம்

★

24—6—56 காலை 9-மணியளவில், பூவிருந்தவல்லி விக்னேஸ்வரா தியேட்டரில், தோழர் டி. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் '2-வது மாநில மாநாடும்—அதன் முடிவும்' எனும் தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் 'கலையும் வாழ்வும்' என்ற தலைப்பில் பேசுவார்.

குணச்சித்திர நடிகர் எம். ஜி. சக்கரபாணி கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்.

டிக்கட் :
ரூ. 1; அணா 8; பெண்கள் அணா 4

நடராசபுரம் கிராமத்தில்

தி. மு. க. துவக்கவிழா

★

23—6—56 மாலை 5-மணியளவில், திருச்சி தாலூகா நடராசபுரம கிராமத்தில் தோழர் அன்பில் தருமலிங்கம் தலைமையில், தோழர் மு. கருணாநிதி தி. மு. கழகத்தைத் துவக்கி வைப்பார்; தோழர் கூ. மு. பெரியசாமி கொடியேற்றி வைப்பார்.

தோழர்கள் ஜி. பராங்குசம், எம். எஸ். மணி, மு. அ. மு. பாண்டித்துரை, ச கந்தசாமி, ந. ப. மாணிக்கம், மு. இரத்தினசாமி பேசுவர்.

அன்று இரவு 10-30 மணியளவில், தோழர் மு. கருணாநிதி தலைமையில், தி. மு. க. தோழர்களால், 'வேலைக்காரி' நாடகமும், 'சேரன் செங்குட்டுவன்' ஓரங்க நாடகமும நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

23—6—56 மாலை 6 மணியளவில், வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், (இராயபுரம், எண் 59, மன்னாசாமி கோயில் தெரு) திரு சந்திரசேகரன் தலைமையில், 'தத்துவம்' என்னும் பொருள்பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். பின்னர், புலவர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

தாய்மொழியை சீரழிய விடாதீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவில் வார்த்தைகளைக் கடன் பெற்றுக்கொண்டு, வளர்க்கப்பட்டுவரும் ஒரு மொழி, ஏற்கனவே வளமெலாம் பெற்றுள்ள ஒரு மொழியை—தமிழ் மொழியை அழித்துவிட்டு, ஆட்சிபீடமேறி அரசோச்ச நினைக்கிறது என்றால், இந்த நிலையை மொழிப் பற்றுக்கொண்டோர் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? தமிழர்களுக்கு இந்திமொழி என்ன அவசியத்திற்காக வேண்டும்?

"தமிழ் மொழி, இந்தியைப் போல் சொற்களைக் கடன் வாங்கித் திரியவேண்டியதில்லையே! அந்த மொழியிடத்தே வேர்ச் சொற்கள் ஏராளம் உண்டு. இன்றைய உலகின் எண்ணற்ற கருத்துக்களையும், முயன்றால், தமிழ் மொழியிலேயே நிச்சயம் தரமுடியும். அந்த அளவு சொல்வளம் பெற்றிருக்கிறதே, தமிழ்! 'இந்தத் தமிழ் மொழி, அரசோச்சக் கூடாது' என்று கூறிவிட்டு, 'இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகும்' என்று கூறுவது என்ன நியாயம்?

"தமிழ் மொழிக்கு வளர்ச்சி தேடித்தந்தவர்கள்—தமிழ் மொழிக்கு முன்பொருமுறை ஆபத்து நேர்ந்தபோது, அதனைத் தவிர்க்க போர்க்களம் புகுந்து வெற்றி பெற்றவர்கள் என்ற முறையில், தி. மு. கழகத்தவர், தமிழ்மொழிக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவேண்டியவர்களாயிருக்கின்றனர்.

"தமிழ் மொழிக்கு, இங்கு இந்தி மொழியால், — அதனைத் திணிப்போரால் ஏற்படுகிற பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும்; தாய்மொழிக்கு வந்துள்ள ஆபத்துகளைத் தவிர்க்கப் போரிடத் தயாராயிருக்க வேண்டும்—என்றுதான் கழகம் கூறுகிறது.

"தாய் மொழி, 'பிரச்சினை'க்கு ஆளாவதே வருந்தற்குரியது. ஆளாகியுள்ள பிரச்சினைக்கு, தீர்வு காணாதிருப்பது அதனினும் வருந்தற்குரியதாகும் என்பதால், வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தமிழ் மொழியைக் காத்து, அது அரசோச்சும் மொழியாகச் செய்யவேண்டியது தமிழர் அனைவரின் கடமையாகும்."

கோவை மாவட்ட தி. மு. க. குழு கூட்டம்

"24—6—56 ஞாயிறு காலை 10-மணியளவில், திருப்பூரில் வாலிபாளையம் ராலே நிட்டிங் கம்பெனியில், கோவை மாவட்ட தி. மு. கழகக் குழுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, (1) மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்; (2) மாவட்ட மாநாடு; (3) காலியான பொதுக்குழு உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் — ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும்,"

என்று, கோவை மாவட்டச் செயலாளர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

திருவள்ளுவர் நினைவுநாள்—கழக முதலாண்டு விழா

24—6—56 காலை 8-30 மணியளவில், சென்னை—16-வது வட்ட திருவள்ளுவர் முன்னேற்றக் கழக முதலாண்டு விழாவும், திருவள்ளுவர் நினைவு நாளும், எண். 22 தாண்டவராய பிள்ளை தெருவில், தோழர்கள் என். வணங்காமுடி தலைமையிலும், கோ. செங்குட்டுவன் முன்னிலையிலும் நடைபெறும். தோழர்கள் பி. செயராமன், க. அ. இரகுநாதன், ப. ஆசைமுத்து, எம். கே. நாகேந்திரன் எம். சி., நா. கா. புரட்சிதாசன் பேசுவர். அன்று காலை 11-30 மணியளவில், ஏழைகளுக்கு உணவளிக்கப்படும்; மாலை 3 மணிக்குமேல், தோழர் எம். உதயகுமார் தலைமையில், மாணவ - மாணவிகளின் விளையாட்டுப் பந்தயம், குறள் போட்டியும், அறிவுப் போட்டியும் நடைபெறும். தோழர் எஸ். மாசிலாமணி பரிசுகள் வழங்குவார்.

முத்தமிழ் மன்ற ஆண்டு விழா பொதுக்கூட்டம்

24—6—56 மாலை 6 மணிக்கு, சென்னை - ஆசிர்வாதபுரம் திடலில (பிரபாத் டாக்கீசுக்கு எதிரில்) தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில், நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், டி. கே. சீனிவாசன் சொற்பயிற்சி போட்டியில் வெற்றி பெற்ற தோழர்கள் தெ. அன்பரசு, டி. கோவிந்தன், இரா. மூர்த்தி பேசுவர்.

பாண்டியன் நாடக மன்ற துவக்க விழா

24—6—56 மாலை 5 மணியளவில், சென்னை - திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகப் பணிமனையில் தோழர் எஸ். எஸ். தென்னரசு தலைமையில், 'பாண்டியன் நாடக மன்ற'த் துவக்க விழா நடைபெறும் தோழர்கள் முத்துக் கிருட்டிணன், மா. பா. சாரதி, நெல்லை - கபிலன், எம். கே. மணி பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

23—6—56 இரவு 7 மணியளவில், இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி, திரு வேங்கட நாயக்கன் தெரு எண். 8 இல்லத்தில், திரு அ ஞானசுந்தரம் குறளில் 'நீத்தார் பெருமை' எனும் தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

இளங்கோ கலை மன்றம்

24—6—56 காலை 10 மணியளவில், மன்றப் பணி மனையில், தோழர் ஏ. கோ. பெருமான் தலைமையில், 'நாடு தந்த நல்லவர்கள்' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், ஏனைய தோழர்களும் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.